## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1994 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

---

*(1994, ஏப்ரில் மாதம் 27 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

***அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.***

---

*1994 ஏப்பிறல் மாதம் 29 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்*
***வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக***
***வெளியிடப்பட்டது.***

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு 7, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : ரூபா 1.50* *தபாற் செலவு : ரூபா 1.55*

1994 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்.

[1994, ஏப்ரில் மாதம் 27 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 40/92

1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம், 1994 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

2. (இதனகத்துப்பின்னர் ("முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :—

"உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) பணிப்பாளர் தலைமையதிபதி முதலியவர்களை நியமித்தல்.

2. (1) இச்சட்டத்தின் நோக்கத்திற்காக, பெயர் குறித்து அல்லது பதவி குறித்துப் பின்வருவோர் நியமிக்கப்படலாம் :—

(அ) (இதனகத்துப் பின்னர் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) பணிப்பாளர் தலைமையதிபதி ஒருவர் ; அவர் இச்சட்டத்தின் நிருவாகத்திற்குப் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப் படுத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான உற்பத்தித் தீர்வைப் பணிப்பாளர்கள் அத்துடன், அத்தகைய எண்ணிக்கையினரான உற்பத்தித் தீர்வைப் பிரதிப் பணிப்பாளர்கள், உற்பத்தித் தீர்வை உதவிப் பணிப்பாளர்கள், அத்துடன் அத்தகைய வேறு அலுவலர்கள்.

(இ) மேலே சொல்லப்பட்ட அலுவலர்களுக்கு உதவுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான நிருவாக, கணக்கிடுகின்ற, தொழில்நுட்ப, சட்ட அலுவலர்கள் அத்துடன் எழுதுவினைஞர்களும் ஏனைய பணியாட்டொகுதியினரும்.

(2) உற்பத்தித் தீர்வைப் பணிப்பாளர், உற்பத்தித் தீர்வைப் பிரதிப் பணிப்பாளர் ஒருவர், உற்பத்தித் தீர்வை உதவிப் பணிப்பாளர், பணிப்பாளர் தலைமையதிபதியின் பொதுப் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைவாக, இச்சட்டத்தினால் அல்லது இதன்கீழ், பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக்

குறித்தொதுக்கப்பட்ட எல்லாத் தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகள் என்பவற்றை அல்லது அவற்றுள் எதனையும் பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்.

(3) முரணுகை வெளிப்படையான ஏற்பாடு இருந்தாலன்றி, உதவிப் பணிப்பாளர் பதவி வரிசைக்குக் குறைந்தவொரு பதவி வரிசையில் உள்ள உற்பத்தித் தீர்வை அலுவலர் ஒவ்வொருவரும், பணிப்பாளர் தலைமையதிபதியின் பொதுப் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைவாக, இச்சட்டத்தின் 5அ, 8அ, 10, 12, 13, 14, 16, 18 அத்துடன் 27 என்னும் பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் தத்துவம், பணி, அல்லது கடமை தவிர, இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட எல்லாத் தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகள் என்பவற்றை அல்லது அவற்றுள் எதனையும், பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 2அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 2அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் ;—

"அலுவலக முறையான இரகசியம்.

2அ. (1) இச்சட்டத்தின் கீழ், அவரது கடமைகளைப் புரிகையில் தவிர, இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டவரான ஆளொவ்வொருவரும், இச்சட்டத்தின்கீழ் தமது கடமைகளைப் புரிகையில் தமது அறிவுக்கு எட்டக்கூடிய எவரேனும் ஆளினது கருமங்கள் தொடர்பிலான எல்லா அலுவல்கள் தொடர்பிலும் இரகசியத்தைப் பேணுதல் வேண்டும் என்பதுடன், இரகசியத்தைப் பேணுவதில் உதவி புரிதலும் வேண்டும் ; அத்துடன் எந்த ஆளுக்கு அத்தகைய கருமம் தொடர்புடையதோ அந்த ஆள் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி அல்லது அமைச்சர் அல்லது அமைச்சரின் அமைச்சிற்கான செயலாளர் தவிர்ந்த ஆளெவருக்கும் அத்தகைய கருமம் எதனையும் அறிவித்தலாகாது ; அத்துடன், பணிப்பாளர் தலைமையதிபதியின் உடைமையில், கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ள எவையேனும் பதிவேடுகளைப் பார்வையிடுவதற்கு எவரேனும் ஆளை விடுதலோ அல்லது அனுமதித்தலோ ஆகாது.

(2) இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டவரான ஆளொவ்வொருவரும், இச்சட்டத்தின் கீழ் செயலாற்றுவதற்கு முன்பு, விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் சமாதான நீதிவான் ஒருவர் முன்னிலையில் இரகசியம்

பேணுவதற்கானதொரு சத்தியத்தைச் செய்து அதில் கையொப்பமிடுதலும் வேண்டும். அத்துடன் அமைச்சரும், அமைச்சரின் அமைச்சுச் செயலாளரும், இச்சட்டத்தின்கீழ் செயலாற்றுவதற்கு முன்பு விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் சமாதான நீதிவான் ஒருவர் முன்னிலையில் இரகசியம் பேணுவதற்கானவொரு சத்தியத்தைச் செய்து, அதில் கையொப்பமிடலாம்.

(3) இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்படும் ஆளெவரும், இச்சட்டத்தின் கீழான ஏற்பாடுகளுக்கு அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் நிருவகிக்கப்படும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்திற்குப் பயன்கொடுக்கும் நோக்கத்திற்கு அவசியமாகக்கூடியவாறாகத் தவிர, ஏதேனும் நீதிமன்றத்தில் ஏதேனும் விபரத்திரட்டை, ஆவணத்தை, அல்லது அறிவித்தலைக் காண்பிக்கும்படி அல்லது இச்சட்டத்தின்கீழ் அவரது கடமைகளைப் புரிகையில் அவரது அறிவுக்கு எட்டக்கூடிய ஏதேனும் கருமத்தை அல்லது காரியத்தை ஏதேனும் நீதிமன்றத்திற்கு வெளிவிடும்படி அல்லது அறிவிக்கும்படி தேவைப்படுத்தப்படுதலாகாது.

(4) இப்பிரிவில் அடங்கியுள்ளது எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்படும் எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் நிருவகிக்கப்படும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின்கீழ், அவரது கடமைகளைப் புரிகையில் அவரது அறிவுக்கு எட்டக்கூடிய ஏதேனும் விடயத்தை இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்படும் வேறு எவரேனும் ஆளுக்கு, இச்சட்டத்தின்கீழ் அல்லது எழுத்திலான அத்தகைய வேறேதேனும் சட்டத்தின்கீழ் ஏதேனும் கடமைகளைப் புரிவதற்கு அத்தகைய விடயத்தைத் தெரிவிப்பது அவசியமானதாயின், தெரிவிக்கலாம்; அத்துடன் பணிப்பாளர் தலைமையதிபதி இச்சட்டத்தின்கீழ் அல்லது எழுத்திலான வேறு சட்டத்தின்கீழ் அவருக்குக் கொடுத்துதவப்பட்ட அல்லது வேறு வகையாக அவரது உடைமையில் உள்ள ஏதேனும் விபரத்திரட்டில் அல்லது ஆவணத்தில் அடங்கியுள்ள அத்தகைய விபரங்களின் உண்மையான பிரதியென அவரால் அல்லது அவரது சார்பில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட எவையேனும் விபரங்களின் பிரதியொன்றை இச்சட்டத்தின் கீழான ஏதேனும் நீதிமன்றத்தில், எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் காண்பிக்கலாம் அல்லது காண்பிக்கச் செய்யலாம். அத்துடன் அத்தகைய பிரதியானது ஆவணங்களை எண்பித்தல் தொடர்பில் சான்றுக் கட்டளைச் சட்டத்தில் உள்ளது எது எவ்வாறிருப்பினும் சான்றாக ஏற்றுக்கொள்ளப்படற்பாலதாதல் வேண்டும்.

ஆயின், பணிப்பாளர் தலைமையதிபதி, அத்தகைய விபரத்திரட்டை அல்லது ஆவணத்தை எழுதிய, ஆக்கிய, கையொப்பமிட்ட அல்லது கொடுத்துதவிய ஆளின் கையெழுத்தை அல்லது கையொப்பத்தை எண்பிப்பது அவசியமானதாக இருக்கின்ற ஏதேனும் விடயத்தில் அவ்வாறு எண்பிக்கும் நோக்கத்துக்காக மாத்திரமே ஏதேனும் அத்தகைய விபரத்திரட்டில் அல்லது ஆவணத்தின் மூலப்பிரதியைக் காண்பிக்கலாம் அல்லது காண்பிக்கச் செய்யலாம்.

ஆயின், மேலும் பணிப்பாளர் தலைமையதிபதி எச் சந்தர்ப்பத்திலேனும் அத்தகைய விபரத்திரட்டில் அல்லது ஆவணத்தில் மூலப்பிரதியோ அல்லது அத்தகைய விபரத்திரட்டின் அல்லது ஆவணத்தில் அடங்கியுள்ள எவையேனும் விவரங்களின் பிரதியையோ ஏதேனும் நீதிமன்றத்தில் காண்பிக்குமாறு கட்டாயப்படுத்தப்படுதலாகாது.

(5) இப்பிரிவில் அடங்கியுள்ளது எது எவ்வாறிருப்பினும், பணிப்பாளர் தலைமையதிபதியானவர், கணக்காய்வாளர் தலைமையதிபதியையோ அல்லது, அவரின் சார்பில் முறையாக அதிகாரமளிக்கப்பட்டவரான கணக்காய்வாளர் தலைமையதிபதித் திணைக்கள அலுவலர் எவரையும், அவரது அலுவலக முறையான கடமைகளைப் புரிவதற்கு அவசியமாகக்கூடியவாறான எவையேனும் பதிவேடுகளை அல்லது ஆவணங்களை பார்வையிடுவதற்கு அனுமதித்தல் வேண்டும். கணக்காய்வாளர் தலைமையதிபதி அல்லது இவ்வுட்பிரிவின் கீழ் அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் (2) ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆளொருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் எது எவ்வாறிருப்பினும், பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியால் அவரின் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட ஆளெவரும், இச்சட்டத்தின் ஒப்புரவான நிருவாகத்தை நிச்சயப்படுத்துவதற்கான தேவையைக் கருத்திற்கொண்டு, ஏதேனும் இடப்பரப்புத் தொடர்பாகப் பின்வருவனவற்றைக் கொண்டுள்ள திரட்டொன்றை, பணிப்பாளர் தலைமையதிபதி உசிதமானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய விதத்தில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும் —

(அ) இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பெற்றவர்களான, அந்த இடப்பரப்பில் உள்ள எல்லா உற்பத்தியாளர்களினதும் இறக்குமதியாளர்களினதும் பெயர்களும் முகவரிகளும்; அத்துடன்

அல்லது அனுப்பு பொருள் பெறுநரினால் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் செலுத்தப்படல் வேண்டுமென்பது டன் அத்தகைய உற்பத்தித் தீர்வை, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அறவிடவும்படலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்படும் கட்டளை யொன்றில் குறித்துரைக்கப்பட்டிருக்கும் பொருட்கள் எவையும் அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட் டுள்ள நிபந்தனைகளுக்கு முரணாகப் பின்னர் விற்கப்படு கின்றவிடத்து அல்லது கையுதிர்க்கப்படுகின்றவிடத்து, அத்தகைய பொருட்கள், உற்பத்தித் தீர்வைக்கு அமை வான அதேபோன்ற பொருட்கள் மீது இச்சட்டத்தின் கீழ் செலுத்தப்பட்டிருத்தற்பாலதான அதே உற்பத்தித் தீர்வைக்கு உட்பட்டதாதல் வேண்டும், அத்துடன் அத் தகைய பொருட்களின் உற்பத்தியாளர், தயாரிப்பாளர் இறக்குமதியாளர் அல்லது அனுப்பு பொருள் பெறுநர் அத்தகைய விற்பனைக்கு அல்லது கையுதிர்த்தலுக்கு முன்னர் பணிப்பாளர் தலைமையதிபதியின் அனுமதி யைப் பெற்று, அத்தகைய விற்பனை அல்லது கையு திர்த்தல் நடந்த நேரத்தில் அத்தகைய பொருட்கள் மீது செலுத்தப்படற்பாலதான உற்பத்தித் தீர்வையைச் செலுத்துதல் வேண்டும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, இத்தால் பின்வரு மாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக் கஞ் செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் :—

"(ஆ) அத்தகைய உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலதான பொருள் இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்ட ஏதே னும் விடயத்தில், இலங்கைக்குள் இறக்குமதி செய்யப் பட்ட பின்னர் உடனடியாக அத்தகைய உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலதான பொருள் எந்தச் சுங்கக் குதத்தில் அல்லது எந்த வேறு இடத்தில் களஞ்சியப்படுத் தப்பட்டதோ, அந்தச் சுங்கக் குதத்திலிருந்து அல்லது அந்த வேறு இடத்திலிருந்து அகற்றப்படுமுன்னர், விதித் துரைக்கப்பட்ட விதத்தில், அத்தகைய உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலதான பொருளை இறக்குமதி செய்தவரினால் செலுத்தப்படல் வேண்டும்.".

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் :—

"(2) (அ) இச்சட்டத்தில் உள்ளது எது எவ்வாறிருப்பினும் (3அ, 4ஆ, 3இ என்னும் பிரிவுகளின் கருத்தெல்லைக்குள் விலக்களிக்கப்பட்ட பொருளொன்றல்லாத) இலங்கைக்கு

வெளியே உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலதான பொருள் எதனையும் இறக்குமதி செய்கின்ற ஆள் ஒவ்வொருவரும், அத்தகைய உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலதான பொருள் எந்தச் சுங்கக் குதத்தில் அல்லது வேறு இடத்தில் களஞ்சியப்படுத்தப் படுகின்றதோ, அந்தச் சுங்கக் குதத்திலிருந்து அல்லது அந்த வேறு இடத்திலிருந்து அகற்றப்படுவதற்கு முன்னர், 3 ஆம் பிரிவின் கீழ் தீர்மானிக்கப்படும் உற்பத்தித் தீர்வை வீதங்களில், அத்தகைய உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலதான பொருள் தொடர்பில் உற்பத்தித் தீர்வையைச் சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் செலுத்துதல் வேண்டும்.

(ஆ) பெறுமதியைத் தொடர்புபடுத்தி உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலதான ஏதேனும் இறக்குமதி செய்யப் பட்ட பொருளின்மீது உற்பத்தித் தீர்வை விதிக்கப்படு கின்றவிடத்து,

இச்சட்டத்தின் 7 ஆம் பிரிவில் அல்லது வேறு ஏதேனும் ஏற் பாட்டில் உள்ளது எது எவ்வாறிருப்பினும் அத்தகைய பொரு ளின் பெறுமதி, பின்வரும் தொகையின் கூட்டு மொத்தமாகக் கருதப்படுதல் வேண்டும் —

(i) அத்தகைய உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பால தான பொருளின் விலைப்பெறுமதி, காப்புறுதிப் பெறுமதி அத்துடன் கப்பற் செலவுப் பெறுமதிக் குச் சமமான தொகை ஒன்று;

(ii) வங்கித் தொழில் அல்லது வேறு இறுப்பனவுகளைச் செலுத்தித் தீர்ப்பதற்கென (i) ஆம் உட்பத்தியில் குறிப்பிடு செய்யப்பட்ட தொகையின் ஐந்து சத வீதத்துக்குச் சமமான தொகை ஒன்று;

(iii) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் அத் தகைய பொருளின் இறக்குமதி தொடர்பில் செலுத்தப்படற்பாலதான எல்லா வரிகளினதும், ஆயவரிகளினதும், அறவீடுகளினதும் முழுத் தொகைக்குச் சமமான தொகையொன்று;".

(3) அப்பிரிவின் (3) ஆம் பிரிவுக்கான காப்புவாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் காப்பு வாசகத்தை இடுவதன் மூலமும் :—

"ஆயின் —

(i) ஏற்றுமதி செய்யும் நோக்கத்துக்காக இலங்கையில் தயாரிக்கப்பட்டிருக்கும் அல்லது உற்பத்தி செய்யப்பட்டிருக்கும் உற்பத்தித்தீர்வை விதிக்கப்படற்பாலதான பொருள் எதுவும், அத்தகைய உற்பத்தித் தீர்வை விதிக்கற்பாலதான பொருள் சென்றடைய வேண்டிய துறைமுகத்தில் இறக்கப்பட வேண்டியதற்கான ரூறியொன்று செய்யப்பட்டால், உற்பத்தித் தீர்வை கொடுப்பனவுக்கு உட்பட்டதாதல் ஆகாது; அத்துடன்

(ii) ஏற்றுமதியாளர்களினால் ஏற்றுமதி செய்வதற்கான பொருட்களின் உற்பத்தியில் மூலப்பொருளாகப் பயன்பத்தப்படும் நோக்கத்துக்காக இறக்குமதி செய்யப்படும் உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலதான பொருளொன்று, அத்தகைய உற்பத்தி செய்யப்பட்ட பொருளானது ஏற்றுமதி செய்வதற்கென உற்பத்தி செய்யப்பட்டதெனப் பணிப்பாளர் தலைமையதிபதி திருப்திப்படும் வண்ணம் போதுமான அளவு எண்பிப்பு கொடுத்துதவப்பட்டால், உற்பத்தித் தீர்வைக் கொடுப்பனவுக்கு உட்பட்டத்தால் ஆகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு அப்பிரிவின் 17 ஆம் உட்பிரிவில் "தொடர்புபடுத்தி உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலதான ஏதேனும் பொருளின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தொடர்புபடுத்தி இலங்கையினுள் இறக்குமதி செய்யப்பட்ட உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலதான பொருளொன்றல்லாத உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலதான ஏதேனும் பொருளின்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 7அ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்.*

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7அ என்னும் பிரிவானது, இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகிறது:-

*"மாதிரிகள், கணக்கீட்டுப் புத்தகங்கள், இடாப்புகள், பதிவேடுகள் அல்லது வேறு ஆவணங்களைக் கோரிப் பெறுவதற்குப் பணிப்பாளர் தலைமையதிபதிக்குள்ள தத்துவங்கள்.*

7அ. (1) பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட உற்பத்தித் தீர்வை உதவிப்பணிப்பாளர் தரத்துக்குக் குறையாத உற்பத்தித் தீர்வை அலுவலர் எவரும் —

(அ) பதினாலாம் பிரிவின்கீழ் பதிவு செய்யப்படுவதற்கு ஆளாகவேண்டிய ஆள் ஒருவர் எனப் பணிப்பாளர் தலைமை அதிபதி அல்லது அத்தகைய உற்பத்தித் தீர்வை அலுவலர் அபிப்பிராயப்படும் ஆள் எவரையும், அப்பிரிவின் கீழ் பதிவுசெய்து கொள்ளுமாறு எழுத்தி

லான அறிவித்தல் மூலம் தேவைப்படுத்தலாம் அத்துடன் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்துக்குக்குள், 14 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஆள் ஒருவரினால் கொடுத்துதவப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய விபரங்களைக் கொண்டுள்ள அத்தகைய விபரத்திரட்டுக்களைக் கொடுத்துதவுமாறு அத்தகைய ஆளைத் தேவைப்படுத்தலாம்;

(ஆ) எழுத்திலான கட்டளைமூலம் ஆளெவரையும் தகவல் கொடுக்குமாறு அல்லது அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய இடத்திலும் காலப்பகுதிக்குள்ளும் கொடுப்பதற்கு அல்லது சமர்ப்பிப்பதற்கு அத்தகைய ஆளின் வசமுள்ள, உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலதான ஏதேனும் பொருள் அல்லது அத்தகைய பொருள் எதனதும் மாதிரிகள் தொடர்பிலான ஏதேனும் கணக்கீட்டுப் புத்தகத்தை, இடாப்பை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைப் பரிசோதனைக்குச் சமர்ப்பிக்குமாறும், அத்துடன் உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலதான ஏதேனும் பொருளின் பெறுமதியை உறுதி செய்யும் நோக்கத்துக்காக அல்லது இச்சட்டத்தின்கீழ் உற்பத்தித் தீர்வை அறவிடுவது தொடர்பான ஏதேனும் விடயத்தின் உண்மைத் தன்மையை உறுதி செய்வதற்காக அத்தகைய ஏதேனும் கணக்கீட்டுப் புத்தகத்தை, இடாப்பை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைப் பரிசோதனை செய்வதற்கும் அவற்றின் பிரதிகளை எடுப்பதற்கும் அல்லது அவற்றிலிருந்து பிரித்தெடுத்த பகுதிகளை எடுப்பதற்கும் பணிப்பாளர் தலைமையதிபதியை அல்லது அத்தகைய உற்பத்தித் தீர்வை அலுவலரை அனுமதிக்குமாறும் தேவைப்படுத்தப்படலாம்.

**(இ)** உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலவரான ஆளெவருக்கும், அத்தகைய ஆளினால் செலுத்தப்படற்பாலதான உற்பத்தித் தீர்வை தொடர்பில், பரிசோதனை செய்யப்படும் நோக்கத்துக்காக, அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய இடத்திலும் அத்தகைய தேதியன்றும் அத்தகைய நேரத்திலும் அவர் தாமே சமூகமளிக்க வேண்டு

மென அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் மூலம் சமூகமளிக்க வேண்டுமென, அவரைத் தேவைப்படுத்துகின்ற எழுத்திலான அறிவித்தலைக் கொடுக்கலாம்.

(2) உற்பத்தித் தீர்வைப் பிரதிப் பணிப்பாளர் ஒருவர் அல்லது உற்பத்தித் தீர்வைப் பிரதிப் பணிப்பாளர் ஒருவரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட உற்பத்தித் தீர்வை உதவிப் பணிப்பாளர் தரத்துக்குக் குறையாத உற்பத்தித் தீர்வை அலுவலர் ஒருவர், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அத்தகைய வைத்திருத்தல் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு, (1) ஆம் உட்பிரிவின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட தேவைப்பாடொன்றுக்கு இணங்கப் பரிசோதனைக்கெனச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் ஏதேனும் கணக்கீட்டுப் புத்தகத்தை, இடாப்பை பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைத் தமது கட்டுக்காவலில் வைத்திருக்கலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது :—

(1) "ஓராண்டு காலப்பகுதிக்குள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐந்தாண்டுக் காலப் பகுதிக்குள்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவுக்கான காப்பு வாசகத்தில் "ஐந்து ஆண்டுகளுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பத்து ஆண்டுகளுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆம் பிரிவைத் திருத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலமும்:—

"(2) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்படும் மேன்முறையீடு ஒவ்வொன்றும், பணிப்பாளர் தலைமை அதிபதிக்கு முகவரியிடப்படும் எழுத்திலான மனு ஒன்று செய்யப்படல் வேண்டுமென்பதுடன் அத்தகைய மேன்முறையீட்டின் ஏதுக்கள் பற்றிச் சரியாகக் கூறுதலும் வேண்டும்.

(3) எத்தீர்மானத்துக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளதோ, அத்தீர்மானமானது, அது தொடர்புறுகின்ற காலப்பகுதி தொடர்பில் 14ஆம் பிரிவின்கீழான விபரத்திரட்டு ஒன்று இல்லாது செய்யப்பட்டிருக்கின்றவிடத்து, மேன்முறையீட்டு மனுவானது, முறையாக ஆக்கப்பட்ட விபரத்திரட்டு ஒன்றுடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்படும் மேன்முறையீடொன்று, அது (1)ஆம் (2)ஆம் அத்துடன் (3)ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு இணங்க இல்லாதுவிடின் பணிப்பாளர் தலைமை அதிபதியினால் நிராகரிக்கப்படுதல் வேண்டும்.".

(2) அப்பிரிவின் (3), (4), (5) அத்துடன் (6) ஆகிய உட்பிரிவுகளை முறையே அதன் (5), (6), (7) அத்துடன் (8) ஆம் உட்பிரிவுகளென மீள இலக்கமிடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (6) ஆம் உட்பிரிவில் "வேறுபடுத்தலாம் அல்லது வெற்றுனதாக்கலாம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வேறுபடுத்தலாம் அல்லது வெற்றுனதாக்கலாம் என்பதுடன் மேன்முறையீடு மீதான தமது முடிபு பற்றி மேன்முறையீட்டாளருக்கு எழுத்தில் அறிவித்தல் கொடுத்தலும் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

(4) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (8) ஆம் உட்பிரிவில் "31 ஆம் எனும் பிரிவின் (3) ஆம் (4) ஆம் அத்துடன் (5) ஆம் உட்பிரிவுகள்" எனும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "31 ஆம் எனும் பிரிவின் (6) ஆம் அத்துடன் (9) ஆம் உட்பிரிவுகள்" எனும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

10. பின்வரும் புதிய பிரிவு, 10ஆம் பிரிவை உடனடுத்துப்பின்னர் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 10அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:— முதன்மைச் சட்டவாக்கத்தில் 10அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்.

"அறிவித்தலைச் சேர்ப்பித்தல்.

10அ. (1) இச்சட்டத்தின் கீழ் பணிப்பாளர் தலைமை அதிபதியினால், உற்பத்தித் தீர்வைப் பணிப்பாளர் ஒருவரினால், உற்பத்தித் தீர்வை பிரதிப் பணிப்பாளரினால், உற்பத்தித் தீர்வை உதவிப் பணிப்பாளர் தரத்திற்குக் குறையாத எவரேனும் உற்பத்தித் தீர்வை அலுவலரினால் கொடுக்கப்படவேண்டிய ஒவ்வொரு அறிவித்தலும் அல்லது அறிவிப்பும் விடயத்திற்கேற்ப பணிப்பாளர் தலைமையதிபதியின் அல்லது உற்பத்தித்தீர்வைப் பணிப்பாளரின் அல்லது உற்பத்தித் தீர்வைப் பிரதிப் பணிப்பாளரின் அல்லது அத்தகைய உற்பத்திவரி அலுவலரது பெயரைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஒவ்வொரு அறிவித்தலும் அல்லது அறிவிப்பும் பணிப்பாளர் தலைமையதிபதியின், உற்பத்திவரிப் பணிப்பாளரின், உற்பத்திவரிப் பிரதிப் பணிப்பாளரின் அல்லது அத்தகைய உற்பத்திவரி அலுவலரின் பெயர் அதன்மேல் முறையாக அச்சடிக்கப்பட்டிருந்தால் அல்லது ஒப்பமிடப்பட்டிருந்தால் வலிதுடையதெனக் கருதப்படுதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் கீழ் தரப்படும் ஒவ்வொரு அறிவித்தலும் அல்லது அறிவிப்பும் ஆளொருவருக்குத் தாமாகவோ அல்லது அவரின் கடைசியாக அறியப்பட்ட வாழிடத்தில் அல்லது அறிவித்தல் எந்தக் காலத்திற்குத் தொடர்புடையதோ அந்தக் காலத்தில் அவர் இருக்கின்ற அல்லது இருந்த ஏதேனும் இடத்தில், ஒப்படைப்பதன் மூலமோ அல்லது அவ்விடத்திற்கு அஞ்சல் மூலம் அனுப்புவதன் மூலமோ சேர்ப்பிக்கப்படலாம்.

(3) அஞ்சல் மூலம் அனுப்பப்பட்ட ஒவ்வொரு அறிவித்தலும், சாதாரண அஞ்சல் நெறியில் கிடைக்கப்பட்டிருந்திருக்கவேண்டிய நாளுக்கு அடுத்துவரும் நாளன்று சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அஞ்சல் மூலம் சேர்ப்பித்தலை எண்பித்தலுக்கு, அறிவித்தலைக் கொண்டுள்ள கடிதம் முறையாக முகவரியிடப்பட்டு அஞ்சல்படுத்தப்பட்டதென்பதை எண்பித்தல், போதியதாக இருத்தல் வேண்டும்.

(5) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தரப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலில் அல்லது அறிவிப்பில் அச்சடிக்கப்பட்டதும் அல்லது ஒப்பமிடப்பட்டதும் அல்லது ஏதேனும் சான்றிதழ்மீது ஒப்பமிடப்பட்டதும், அதைத் தருவதற்கு அல்லது வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயராக வேண்டுமெனக் கருதப்படுவதுமான ஒவ்வொரு பெயரும் நீதிமுறையாக அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(6) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் எண்ணத்திற்கும் கருத்துக்கும் இணங்க அல்லது அதன் பிரகாரம், அறிவித்தல், அறிவிப்பு சான்றிதழ் அல்லது வேறு ஆவணம் எதுவும், பொருளளவிலும் பயனிலும் இருந்தால் அத்துடன் அத்தகைய அறிவித்தல், அறிவிப்பு சான்றிதழ் அல்லது ஆவணம் தொடர்புபடுத்துகின்ற அல்லது அதனால் பாதிப்புக்குள்ளான ஆள், பொதுக் கருத்துக்கும், புரிந்துணர்வுக்கும் இணங்க அதன்கண் பதவிப்பெயர் குறித்து நியமிக்கப்பட்டிருந்தால், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க தரப்பட்ட அல்லது வழங்கப்பட வேண்டுமெனக் கருதப்படும் அத்தகைய அறிவித்தல், அறிவிப்பு, சான்றிதழ் அல்லது வேறு ஆவணம் எதுவும், அது படிவத்தில் இல்லாததற்காக இல்லாதொழிக்கப்படுதல் ஆகாது அல்லது வெறிதாகுமெனவோ அல்லது வெறிதாகுவாகுமெனவோ கருதப்படலாகாது, அல்லது அதன்கண் உள்ள ஒரு தவறு, பழுது, அல்லது விடுபாடு காரணமாகப் பாதிக்கப்படுதல் ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 11அ அத்துடன் 11ஆ ஆகிய புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

11. பிரிவு 11ஐ உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் 11அ அத்துடன் 11ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுத்தலும் வேண்டும் :—

"தவணை தவறுநரின் சொத்துக்கள்மீது உற்பத்தித் தீர்வை ஒரு அறவீடாதல்.

11அ. தவணை தவறிய ஏதேனும் உற்பத்தித் தீர்வை தவணை தவறியவரின் எல்லாச் சொத்துக்கள் மீதான ஒரு அறவீடாதல் வேண்டும்.

ஆயின்,

(i) பதினொன்று (ஆ) என்னும் பிரிவின்கீழ் அவற்றைக் கைப்பற்றுவதற்கு முன்னர் பெறுமதிக்காக ஒரு நல்லெண்ணக் கொள்வோருக்கு தவணைதவறியவரினால் விற்கப்பட்ட ஏதேனும் சொத்துக்களுக்கு அத்தகைய அறவீடு நீடிக்கப் படமாட்டாது அல்லது அவற்றைப் பாதிக்கமாட்டாது ;

(ii) அசைவற்ற ஆதனம் தொடர்பில் அறவீடானது 11ஆ என்னும் பிரிவின் கீழ் அத்தகைய சொத்தைக் கைப்பற்றிய தேதிக்கு முன்னர், பெறுமதிக்காக நல்லெண்ணத்துடன் உருவாக்கப்பட்டுப் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் குத்தகைக்கு அல்லது பாரபந்தத்திற்கு முன்னுரிமை பெறுதலாகாது; அத்துடன்

(iii) அசைவுள்ள ஆதனம் தொடர்பில், அறவீடானது, தவணை தவறிய தேதிக்கு முன்னர், பெறுமதிக்காக நல்லெண்ணத்துடன் உருவாக்கப்பட்ட ஏதேனும் ஈட்டுரிமை அல்லது பாரபந்தத்திற்கு முன்னுரிமை பெறுதல் வேண்டும்.

கைப்பற்றி விற்பனை செய்வதன் மூலம் அறவிடுதல்.

11ஆ. தி(1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக வரி சேகரிப்பாளராக ஆட்கள் நியமிக்கப்படலாம்.

(2) (அ) ஏதேனும் உற்பத்திவரி தவணை தவறுகின்றவிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, அத்தகைய உற்பத்தித்தீர்வையின் விவரங்களையும் தவணை தவறியவரின் பெயர்களையும் கொண்ட ஒரு சான்றிதழ்தனை, பெரும்பாகச் செயலாளர் அல்லது வரிசேகரிப்பாளருக்கு வழங்கலாம், அத்துடன் அத்தகைய சான்றிதழ் எந்த அலுவலருக்கு வழங்கப்பட்டுள்ளதோ அந்த அலுவலர், சான்றிதழில் பெயர் குறிப்பிடப்பட்ட தவணை தவறியவரின் அசைவுள்ள ஆதனத்தைக் கைப்பற்றி விற்பனை செய்வதன்மூலம் தவணை தவறியவரிடமிருந்து உற்பத்திவரி அறவிடப் படச் செய்விப்பதற்கு இத்தால் தேவைப்படுத்தப்படவும் நத்துவமளிக்கப்படவும் வேண்டும்.

(ஆ) சொல்லப்பட்ட கைப்பற்றுகையானது, அது சார்பில் மிக உசிதமானதென சொல்லப்பட்ட அலுவலர் கருதுகின்றவாறான, அத்தகைய முறையில் பயனுறுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு கைப்பற்றப்பட்ட ஏதேனும் ஆதனம் தவணைதவறியவரின் செலவிலும், இடர்ப்பாடுகளிலும் ஐந்து நாட்களுக்கு வைத்திருக்கப்படுதல் வேண்டும். தவணைதவறியவர், சொல்லப்பட்ட ஐந்து நாட்களினுள் செலவுகள், கட்டணங்களுடன் சேர்த்து தவணைதவறிய உற்பத்திவரியைச் செலுத்தாவிடின் பெரும்பாகச் செயலாளர் அல்லது வரிசேகரிப்பாளர் சொல்லப்பட்ட ஆதனத்தைப் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படச் செய்வித்தல் வேண்டும்.

(இ) விற்பனை மூலம் பெறப்பட்ட தொகை பின்வருவனவற்றிற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்—

(i) முதலாவது ஆதனத்தைக் கைப்பற்றி, வைத்திருந்து விற்பனை செய்தலுக்கான செலவுகளையும் விதிப்பனவுகளையும் கொடுப்பனவு செய்தல்; அத்துடன்

(ii) இரண்டாவதாக தவணைதவறிய உற்பத்தித்தீர்வையைத் திருப்தி செய்தல்.

அத்துடன், ஏதேனும் மிகுதி இருப்பின் அது கைப்பற்றப்பட்ட ஆதனத்தின் சொந்தக்காரருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) உற்பத்திவரி தவணைதவறுகின்றவிடத்தும், பணிப்பாளர் தலைமையதிபதி, (2)ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட வழிகள் மூலம் அறவீடு செய்தல் செயல்முறை சாத்தியமில்லை அல்லது உசிதமானதில்லை என்னும் அபிப்பிராயம் உடையவராயிருக்குமிடத்தும் அவர் தவணைதவறியவர் எந்த மாவட்டத்தில் வதிகின்றாரோ அந்த ஏதேனும் மாவட்டத்தில், அல்லது தவணை தவறியவரினால் உடைமையாக்கப்பட்ட ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளதோ அந்த ஏதேனும் மாவட்டத்தில் நியாயாதிக்கமுள்ள ஒரு மாவட்ட நீதிமன்றத்துக்கு, அத்தகைய உற்பத்தி வரியின் விவரங்களையும், உற்பத்திவரி எந்த ஆள் அல்லது ஆட்களினால் செலுத்தப்படற்பாலதானதோ அந்த ஆள் அல்லது ஆட்களின் பெயர் அல்லது பெயர்களையும் கொண்டுள்ள சான்றிதழ் ஒன்றை வழங்கலாம். அத்துடன் நீதிமன்றமானது, அதன்மீது, தவணை தவறியவரின் எல்லா அல்லது ஏதேனும் அசைவுள்ள அத்துடன் அசைவற்ற ஆதனத்தை, அல்லது உற்பத்திவரியை அறவிடுவதற்கு அவசியமென அவர் கருதுகின்றவாறான அத்தகைய பாகத்தைக் கைப்பற்றி விற்பனை செய்வதற்கு அவருக்கு அதிகாரம் வழங்குகின்றதும் அவரைத் தேவைப்படுத்துகின்றதுமான நிறைவேற்று எழுத்தாணை ஒன்றைப் பிஸ்காலுக்குப் பணிக்கலாம். அத்துடன் குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 226ஆம் பிரிவு தொடக்கம் 297ஆம் பிரிவு வரையிலான பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் அத்தகைய கைப்பற்றலுக்கும் விற்பனைக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் ஒரு சான்றிதழைப் பணிப்பாளர் தலைமையதிபதி வழங்குகின்றபோதெல்லாம், அதன் ஒரு அறிவிப்பை அவர் அதேநேரத்தில், தானகச் சேர்ப்பிப்பதன்மூலம் அல்லது அஞ்சல் மூலம் அனுப்பப்பட்ட பதிவுசெய்யப்பட்ட கடிதம் மூலம், தவணைதவறியவருக்கு வழங்குதல் வேண்டும். ஆனால், தவணைதவறியவருக்கு அத்தகைய அறிவித்தல் கிடைக்கப்பெறாமை இப்பிரிவின் கீழான வழக்குநடவடிக்கைகளை வலிதற்றதாக்குதல் ஆகாது.".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 12அ என்னும் பிரிவைத் திருத்துதல்.**

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "இரண்டு சதவீதத்துக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "மூன்று சதவீதத்துக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம்; அத்துடன்

(2) அந்த உட்பிரிவின் காப்புவாசகத்தில் "தவணைதவறிய தீர்வையின் ஐம்பது சதவீதத்தை விஞ்சுதலாகாது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "தவணை தவறிய தொகையை விஞ்சுதலாகாது" என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 13ஆம் பிரிவைத் திருத்துதல்.**

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "இயைபான தேதியிலிருந்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கொடுப்பனவுத் தேதியிலிருந்து" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஆம் பிரிவைத் திருத்துதல்.**

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஆம் பிரிவு, அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில், இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அவ்வுட்பிரிவின் (i) ஆம் உட்பந்தியை நீக்குவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (ii) ஆம் (iii) ஆம் உட்பந்திகளை, முறையே அவற்றின் (i) ஆம் (ii) ஆம் உட்பிரிவுகள் என்றவாறு மீள இலக்கமிடுவதன் மூலமும்.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஆம் பிரிவைத் திருத்துதல்.**

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு, அதிலுள்ள "ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 24ஆம் பிரிவைத் திருத்துதல்.**

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு, அப்பிரிவின் முடிவில் பின்வரும் உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது —

"(7) (அ) பிரிவு 2அ (2) என்பதன் கீழ் இரகசியம் பற்றிய சத்தியத்தை எடுப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஆளொருவராக இருந்துகொண்டு அத்தகைய சத்தியத்தை எடுக்காமலே இச்சட்டத்தின் கீழ் செயற்படுபவரான,

(ஆ) பிரிவு 2 (அ) (1) என்பதனை மீறி அல்லது 2 (அ) (2) என்னும் பிரிவின் கீழ் எடுக்கப்பட்ட சத்தியமொன்றை மீறி

செயற்படுபவரான எவரேனும் ஆள், இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்க முறையிலான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஓராண்டுக்கு

மேற்படாத காலத்துக்கு மறியற்றண்டனைக்கு அல்லது நூறு யிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்துக்கு அல்லது அத் தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

(8) பிரிவு 3(இ) என்பதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட பொருளொன்றின் உற்பத்தியாளரான, தயாரிப் பாளரான அல்லது இறக்குமதியாளரான அல்லது அனுப்பப்படும் பொருள் பெறுநரான எவரேனுமாள், பணிப்பாளர் தலைமையதிபதியின் முன் அனுமதியில்லாமல் அல்லது அத்தகைய கட்டளையில் குறித்துரைக் கப்பட்ட ஏதேனும் நிபந்தனையை மீறி அத்தகைய பொருளை விற்பாரெ னின் அல்லது கையுதிர்ப்பாரெனின், இச்சட்டத்தின் கீழான தவறொன் றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன் னரான சுருக்கமுறையிலான விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப் படுவதன் மேல், நூறாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்துக்கு ஆளாகுதல் வேண்டும்.

(9) பிரிவு 7 அ என்பதன் கீழான அறிவித்தலொன்று அல்லது கட்டளை யொன்று சேர்ப்பிக்கப்பட்டுள்ளவரான எவரேனுமாள் அத்தகைய அறி வித்தலின் அல்லது கட்டளையின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகு வதற்கு வேண்டுமென்றே தவறுவாரெனின், இச்சட்டத்தின் கீழான தவ றொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறையிலான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப் பளிக்கப்படுவதன் மேல், நூறாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத் துக்கு ஆளாகுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 32ஆம் பிரிவைத் திருத்துதல்.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு இத்தால் பின்வரு மாறு திருத்தப்படுகின்றது :—

(1) "முகவர்" என்னும் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின் வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் —

""அதிகாரமளிக்கப்பட்ட ஆள்" என்பது, இச்சட்டத்தின்நோக் கங்களுக்காக அவர் சார்பில் செயற்படுவதற்கென இச்சட்டத் தின் கீழ் பதிவுசெய்யப்பட்டவரான ஒரு தயாரிப்பாளரினால் உற்பத்தியாளரினால் அல்லது இறக்குமதியாளரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்டவரான எவரேனும் தனியாள் எனப் பொருள்படும்.

"உற்பத்தித் தீர்வை" என்பது, இச்சட்டத்தின் கீழ் தீர்வை விதிக்கப்படற்பாலதான பொருளொன்றின் எவரேனும் தயாரிப் பாளரினால், உற்பத்தியாளரினால் அல்லது இறக்குமதியாளரினால் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் பணத்தொகை எனப் பொருள்படுவதுடன், அத்தகைய ஏதேனும் தீர்வைக்கு 12அ என்னும் பிரிவின் கீழ் தவறுகை என்னும் காரணத்தினால் கூடுத லாகச் சேர்க்கப்படும் பணத்தொகை எதனையும் உள்ளடக்குவது மாகும்.",

(2) "தயாரிப்பாளர் அல்லது உற்பத்தியாளர்" என்னும் வரைவிலக் கணத்துக்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

"தயாரிப்பாளர் அல்லது உற்பத்தியாளர் என்பது—

(அ) பொருளொன்றை ஆக்குகின்ற ;

(ஆ) ஏதேனும் பொருளை விற்பனைக்கென இசைவாக்குகின்ற ;

(இ) பண்டங்களைப் பதனிடுகின்ற அல்லது பொருத்தியமைக் கின்ற,

எவரேனும் ஆள் என்று பொருளாகும்.".

(3) "காலாண்டு" எனும் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :—

""மீளளிப்பு" என்பது, இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் தீர்வை விதிக்கப்படற்பாலதான பொருட்களின் மீதான உற்பத் தித் தீர்வையின் தள்ளுபடியை உள்ளடக்குவதாகும்.".

18. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் சந்தர்ப்பத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை காணப்படும் சந்தர்ப்பத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 ; (வெளிநாடு) ரூபா 1,859 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், 255, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 7 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.